# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR

## CC. 248/2024

## LW 1PW1

| | | | |
|---|---|---|---|
| Name | சிவனேஷ் | | |
| Husband Name | பாஸ்கர் | Calling | |
| Village | தேவூர் | Religion | |
| Taluk | | Age | 27 |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of

27-01-2025

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது தேவூரில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த ஆண்டு ஒரு நாள் இரவு 8.30 மணியளவில் தேவூர் கடைத்தெருவில் ஆஜர் எதிரிகள் என்னிடம் மது கேட்டார்கள். என்னிடம் காசு இல்லை என்று கூறினேன். அதற்கு ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை மூங்கில் கம்பால் இடது நெற்றியில் அடித்தார்கள். உடனே 108 ஆம்புலன்ஸ் மூலமாக நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்ததை கூறினேன். என்னிடம காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா. ஆ 1 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவமானது மதுபான கடையின் வாசலில் தான் நடந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளன்று நான் மது அருந்தியிருந்தேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு சிகிச்சை அளித்த மருததுவரிடம் நான் இரண்டு நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் சம்பவம் நடந்த நாளன்று மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், மறுநாள் தான் சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் மருத்துவரிடம் என்னை மூன்று நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளுக்கு எதிராக பொ'யயாக ஒரு புகார் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் 2ம் எதிரி என் அண்ணன் மீது புகார் அளித்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதனால ஏற்பட்ட முன் விரோதத்தின் காரணமாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக ஒரு புகார் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடமானது கூட்டமான இடம் என்று சொன்னால் சரிதான். பட்டியல் சாட்சிகள் அனைவரும் என் உறவினர்கள் என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் என் தெருவை சேர்ந்தவர்கள். நான் வசிக்கும் வ.உ.சி தெருவானது சம்பவ இடத்திலிருந்து 1 கி.மீ தொலைவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் மது அருந்தியிருந்ததால் சம்பவம் நடந்த நாளன்று மருத்துவமனை செல்லாமல் மறுநாள் மருத்துவமனை சென்றேன் என்று சொன்னால் சரியல்ல.